# “கம்பராமாயணத்தில் கருத்தியல் வெளிப்பாடுகள்”

மதுரை காமராசர் பல்கலைக்கழக முனைவர் (Ph.D.,)
பட்டத்திற்காகத் தன்னாட்சித் தகுதி பெற்ற தியாகராசர்
கல்லூரி வழியாக அளிக்கப்படும் ஆய்வுச் சுருக்கம்


ஆய்வாளர்

**ம. விமலா**

பதிவு எண் : F 9676

நெறியாளர்

முனைவர் **சு. காந்திதுரை**



**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

**(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)**

**மதுரை - 625 021.**

**ஆகஸ்ட் - 2018**

# ஆய்வுச்சுருக்கம்

**முன்னுரை**

தமிழ் இலக்கியம் ஏறக்குறைய இருபத்தைந்து நூற்றாண்டு வரலாறு படைத்தவை என்பது மு.வ.வின் கருத்தாகும். முக்களின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் தன்னகத்தே கொண்டு எடுத்துரைப்பது இலக்கியத்தின் முக்கியப் பணியாகும். இலக்கியம் ஒரு சமுதாயத்தின் நிலைக்கண்ணாடி என்பது மிகையில்லை.

தமிழும், தமிழ்ச் சமுதாயமும் நிலைத்து நிற்கும் வரை எண்ணிப் பார்க்கக் கூடிய பல பெருமைகளுக்குரியவர் கம்பர். கம்பனை மறந்தால் தமிழேது எனச் சொல்லுமளவிற்குத் தமிழுக்குப் பெருமை சேர்த்தவர். பாரத கண்டத்தில் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த இதிகாசம் மகாபாரதமும் இராமாயணமும் ஆகும். வடமொழியில் வான்மீகி இராமாயணமும், தமிழில் கம்ப ராமாயணமும் இயற்றப்பட்டது.

கம்பராமாயணம் அகத்திணைக் கூறு, புறத்திணைக் கூறு மற்றும் சிற்றிலக்கிய வகைமைகளை உள்ளடக்கிய பெருங்காப்பியமாகத் திகழ்கின்றது. ‘பாவிகம் என்பது காப்பியப் பண்பே’ என்பதற்கேற்ப காப்பியம் தொடக்கம் முதல் இறுதி வரை அறம், அரசியல், சமயம், சமூக வாழ்க்கை போன்றவற்றில் பாத்திரங்களின் ஊடாக கருத்தியலை வெளிப்படுத்துகின்றது. படைப்பாளி சமூகத்தின் தேவையை உணர்ந்து அறிவுறுத்தும் வண்ணம் படைப்பை முன் வைக்கின்றான். இதில் தனக்கான கருத்தியலையும், சமூக வாழ்வியல் கருத்தியலையும், சமயக் கருத்தியலையும் பொதுத் தளத்தின் இடையீடு இல்லா வண்ணம் வெளிப்படுத்துகிறான். இக்கருத்தியலை ஆராயும் பொருண்மையில் இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வுத் தலைப்பு

**"கம்பராமாயணத்தில் கருத்தியல் வெளிப்பாடுகள்"** என்பது ஆய்வின் தலைப்பாக அமைகின்றது.

## ஆய்வு நோக்கம்

கம்பராமாயணம் அறம், பொருள், இன்பம், வீடுபேறு எனும் நாற்பொருளை அடியொற்றியே எழுந்தவை ஆகும். சமூகத்தில் எல்லோராலும் விரும்பத்தக்க, மதிக்கத்தக்க அற இலக்கியமாக முதன்மைப்படுத்தப்-படுகிறது. மக்களுக்கான வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்கின்றது. வாழ்வில் பிழை (அல்லது) தவறு செய்தால் தண்டனை உண்டாகும் என்ற நிலையில் 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்ற கருத்தியலை முன் வைக்கிறது. இராமனைக் கடவுள் நிலைக்கு உயர்த்துவதால் காப்பியத்தின் உள்ளக் கிடக்கையாக வைணவ சமயத்தை அடியொற்றித் தனது கருத்தியலைப் படைப்பாளி முன்வைக்கிறார். கம்பராமாயணம் கற்பு நெறியையும், கடவுள் நம்பிக்கையையும், அறங்கள் மீதான தாக்கம் காப்பியத்தில் காணலாம். அறத்தை முன்நிலைப்படுத்துவதும், தனக்கான தனித்த அடையாளங்களாக, சகோதரப்பாசம், பிறன்மனை நயவாமை, ஆணவம் அழிவைத் தரும் என்பனபோன்ற சமுதாயப் பொருண்மையை முன் வைத்து கருத்தியல் அடிப்படையில் புதுமையைத் தோற்றுவிக்கின்றன.

இக்கருத்தியல் புதுமை வாழ்வியல்சார் கருத்தியலையும், சமுதாயக் கருத்தியலையும் முன் வைக்கின்றது. கிளைக் கதைகளின் வழி வெளிப்படும் கருத்தியலையும், சமுதாயப் பொருண்மைக்கான கருத்தியலையும், பாத்திரங்கள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதையும் கண்டு தெளிவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

## ஆய்வு கருதுகோள்

திணை சார் வாழ்வுமுறை நிலவிய சங்ககாலச் சமூகச் சூழலில் புதிய அரசுகள் தோற்றம் பெற்றன. மனித வாழ்வியல் சார்ந்த உறவு நிலைகளில் கருத்தியல் மாற்றங்கள் உருவாகின. இத்தகைய சூழல்களில் மானுட உறவுகளில் பெரிய மாற்றங்கள் பாத்திரங்களுக்கான சமூகக் கருத்தியலையும், உளவியல் போராட்டங்களை வெளிப்படுத்துவதைப் படைப்பாளி கிளைக்கதைவழியாக தனித்தன்மைகளை தனக்கான கருத்தியலை வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் கருதுகோளாக அமைகின்றது.

## ஆய்வு எல்லை

கம்பராமாயணம் (அ.ச.ஞா.உரை), ஆறு காண்டங்களில் 118 படலங்களில் 10,368 பாடல்கள் முழுமையும் இவ்வாய்விற்குரிய எல்லையாக அமைகின்றன.

## ஆய்வு முன்னோடிகள்

கம்பராமாயணம் ஆறு காண்டங்களை உள்ளடக்கிய கருத்தியல் பதிவாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. கம்பராமாயணக் கருத்தியலை முதன்மையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுவதால் இவ்வாய்வு முதன்மையானதாகும். இவ்வாய்வின் முன்னோடிகளாக மாசி – நாரணன் விளையாட்டு (1956), எஸ்.வையாபுரிப்பிள்ளை – கம்பன் காவியம் (1965), வே.இராமசுப்ரமணியன் - பாத்திரமும் பாத்திறமும் (1979) ஈத.இராஜேசுவரி - இராமாயணத்தின் இரு திருப்பு மையங்கள் (1979), ந.மு.வேங்கடசாமி நாட்டார் - கம்பர் காட்டும் ஒழுக்க நெறிகளில் சில (1979), மு.மு.இஸ்மாயில் - கம்பன் கண்ட இராமன் (1982), சாண்டில்யன் கம்பன் கண்ட பெண்கள் (1985), அ.பாண்டுரங்கன் - காப்பிய நோக்கில் கம்பராமாயணம் (1989), இரா.பிரேமா -

இராமாயணக் கிளைக் கதைகள் ஒப்பீடு (1989), தே.ஞான சுந்தரம் - கம்பராமாயணத்தில் சகோரதத்துவம் (2005), சே.வேங்கடராமன் - இராமாயணச் சிந்தனைகள் (2006) ஆகியன முன்னோடி ஆய்வுகளாகும்.

## ஆய்வு ஆதாரங்கள்

ஆய்வு ஆதாரங்கள் இரண்டு நிலையில் அமைகிறது.

1. முதன்மை ஆதாரங்கள்
2. துணைமை ஆதாரங்கள்

## முதன்மை ஆதாரங்கள்

கம்பராமாயணம் (அ.ச.ஞா.உரை) ஆறு காண்டங்களும் இவ்வாய்வுக்கு முதன்மை ஆதாரங்களாகும்.

## துணைமை ஆதாரங்கள்

கம்பராமாயணம் தொடர்பாக வெளிவந்துள்ள திறனாய்வு நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும், கருத்தரங்கக் கட்டுரைகளும், துணைமை ஆதாரங்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## ஆய்வு அணுகுமுறை

கம்பராமாயணம் கருத்தியல் அடிப்படையில் ஆய்வுச் செய்திகளைப் பகுத்து விளக்கிக் கூறும் முறையில் பகுப்பு முறைத் திறனாய்வும் (Analytical method), விளக்கமுறைத் திறனாய்வும், (Descriptive method), இவ்வாய்வில் பின்பற்றப்படுகின்றன. கதைப் பாத்திரங்களை சமூக அடிப்படையில் காணுகின்ற பொழுது சமூகவியல் அணுகுமுறையும், (Social approach), உளவியல் அணுகுமுறையும் (Psychological approach) பின்பற்றப்படுகின்றன.

## இயல் பகுப்பு

**'கம்பராமாயணத்தில் கருத்தியல் வெளிப்பாடுகள்'** என்ற இவ்வாய்வு முன்னுரை முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது. அவை,

முன்னுரை

- ❖ கம்பராமாயணத்தில் கருத்தியல் அமைவுகள்
- ❖ கிளைக்கதைகளில் வெளிப்படும் கருத்தியல்
- ❖ பாத்திரங்கள் வழியாக வெளிப்படும் கருத்தியல்
- ❖ சமுதாயப் பொருண்மைகளில் வெளிப்படும் கருத்தியல்

முடிவுரை

## இயல் பகுப்பு

ஆய்வுத் தலைப்பு, ஆய்வு நோக்கம், ஆய்வு கருதுகோள், ஆய்வு எல்லை, ஆய்வு முன்னோடிகள், ஆய்வு ஆதாரங்கள், ஆய்வு அணுகுமுறை, இயல் பகுப்பு, ஆய்வுச் சுருக்கம் ஆகியவை முன்னுரையில் இடம் பெறுகின்றன.

**'கம்பராமாயணத்தில் கருத்தியல் அமைவுகள்'** என்ற முதல் இயலில் கருத்தியல் என்பது கவிஞன் தான் உணர்ந்த செய்தியை (கருத்தை) பலரும் உணரும் வகையில் இலக்கியங்களில் பதிவு செய்யும் பொழுது கருத்தாக்கம் பெறுகின்றது. கவிஞனின் ஒரு மித்த சிந்தனை படிப்படியாக வளர்ந்த நிலையே கருத்தியல். காவியத்தின் நோக்கத்தை மட்டும் கொள்ளாது அச்சமூகத்தில் நிலவிய அரசியல் தொழில்கள், கலைகள், சமயம், உணவு முறைகள், விழாக்கள் ஆகிய அனைத்தையும் கருப்பொருளோடு நோக்குவதே கருத்தியலாகும். காப்பியக்

கட்டமைப்பு நிலையில் காப்பிய இலக்கணத்தை உள்ளடக்கிய காப்பியமாகக் கம்பராமாயணம் திகழ்கின்றது. ஒரு நாடு அல்லது அதன் நாகரிகம், பண்பாடு முதலான உன்னத நிலையிலிருந்து வீழ்ச்சி பெறுகிற போது தான் பழைய பண்பாட்டினை மீட்டுருவாக்கவும், புதிய சமூக மாற்றத்தை எடுத்துரைத்து மனித சமூகத்தை உயர்த்துவதுமான உயரிய நோக்குடைய காப்பியங்கள் தோன்றுகின்றன.

**'கிளைக்கதைகளில் வெளிப்படும் கருத்தியல்'** என்ற இரண்டாம் இயலில் தலைமைப் பாத்திரத்தின் பண்பினை உயர்த்த கிளைக்கதைகள் எடுத்துரைக்கப்படுகின்றன. கிளைக்கதையின் இருப்பு நிலை, கிளைக்கதைக்கான இலக்கணம், கிளைக்கதைகளின் நோக்கம், கிளைக்கதைகளின் வகைகள், தலைமை மாந்தர் கருத்தை வெளிப்படுத்தும் கிளைக் கதைகள், துணைமைப் பாத்திரங்கள் முன்னிலைப்படுத்தும் கிளைக் கதைகள், படைப்பாளி முன் வைக்கும் கிளைக் கதைகள், வரலாற்றை உணர்த்தும் கிளைக் கதைகள், புராணக் கதையை மையமிட்ட கிளைக் கதைகள், சமயத்தை வலியுறுத்தும் கிளைக் கதைகள், பெண்மை அடையாளப்படுத்தும் கிளைக் கதைகள், தாடகை, சுயம்பிரபை, அங்காரதாரை, இலங்கை மா தேவி போன்றோர்களின் கதைகள் மூலம் 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்ற காப்பியக் குறிக்கோளை உணர்த்தவும் படைப்பாளி காப்பியத்தில் படைத்துள்ளார்.

**'பாத்திரங்கள் வழியாக வெளிப்படும் கருத்தியல்'** என்னும் மூன்றாவது இயலில் காப்பியப் பாத்திரங்கள் கருப்பொருளை விளக்கும் நோக்கத்திலேயே படைக்கப்பட்டுள்ளன. தலைமைப் பாத்திரம் - இராமன், திருப்பு முனைப் பாத்திரங்கள் - கூனி, கைகேயி, சூர்ப்பனகை, மாரீசன், எதிர்நிலைப் பாத்திரங்கள் - இராவணன், வாலி, முதல்நிலைத் துணைமைப் பாத்திரங்கள் - இலக்குவன், குகன், சுக்கிரீவன், வீடணன், இரண்டாம்

நிலைத் துணைமைப் பாத்திரங்கள் - அனுமன், சடாயு, பாத்திரப்படைப்பில் கற்புக்கரசியர் - சீதை, மண்டோதரி, தாரை ஆகியோரைப்பற்றி விளக்கப்பட்டுள்ளது.

**'சமுதாயப் பொருண்மையில் வெளிப்படும் கருத்தியல்'** என்னும் நான்காம் இயலில் இராமனுக்கு முடிசூட்டு விழா நடைபெறுவதற்கு முன் வசிட்ட முனிவர் இராமனுக்கு யாரொடும் பகை கொள்ளாமல் இருந்தால் 'போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது' என்ற அறிவுரையை எடுத்துக் கூறுவதால் பகை இல்லாத வாழ்வை எப்படி அமைத்துக் கொள்வது என்ற கருத்து வெளிப்படுத்தப்படுகிறது. பகை இல்லா வாழ்வு, பிறன்மனை நயவாமை, சகோதரத்துவம், உணர்ச்சி ஆளுமைப் பண்பு, கம்பன் கண்ட கனவு, கம்பர் போற்றும் பெண்மை, குணம் நாடி ஏற்றுக் கொள்ளும் பண்பு, கம்பனில் விழுமியங்கள், மானுட மதிப்புகள் பற்றி இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

இராமன் மனிதனாக மண்ணில் அவதரித்து மக்களைத் தீமையிலிருந்து காப்பாற்றி நன்னெறியில் வாழ்விப்பதால் மனித குலத்திற்கே பெருமை உண்டாயிற்று என்று கம்பர் மானுடத்தின் பெருமையை சுக்ரீவன் வாயிலான உணர்த்த முனைவதன் மூலம் மானுடம் சார்ந்த கருத்தியல் வெளிப்படுத்தப்படுகின்றது.

**"முடிவுரை"** ஒவ்வொரு இயலில் கண்டறிந்த ஆய்வு முடிவுகளையும் தொகுத்துத் முடிவுரையில் தரப்பட்டுள்ளன.

**"துணைநூற்பட்டியலில்"** இவ்வாய்விற்குத் துணைபுரிந்த நூல்கள், கட்டுரை, ஆய்வேடுகள், அகராதிகள் ஆகியன அகரவரிசைப்படி தொகுத்துத்தரப்பட்டுள்ளன.

**"பின்னிணைப்பில்"** இவ்வாய்விற்குத் தொடர்புடைய குறிப்புகள் தரப்பட்டுள்ளன.